# போதைப் பொருள் பாவனையும் நடைமுறைசார் பிரச்சினைகளும்- அக்கரைச்சேனை கிராமத்தினை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

S. Mohammed Siyan, S. Sameera Umma, A. R. Fathima Aneesa, M.M. Shiyana

Department of Islamic Studies, South Eastern University of Sri Lanka
Saznasayan@gmail.com

**ஆய்வு சுருக்கம் :** போதையானது தன்னிலை மறக்க செய்யும் ஓர் செயற்பாடாக இருக்கிறது. போதைப் பொருள் பாவனையானது தனிமனித சீரிழிவு, வன்முறையான குடும்ப அமைப்பு மற்றும் பல்வேறு வகையான உயிர் குடிக்கும் நோய்களுக்கும் வழி வகுக்கின்றது. இதன் அடிப்படையில் மூதூர் பிரதேச அக்கரைச்சேனை கிராமத்திலுள்ள போதை பொருட்களை அடையாளப்படுத்துவதும் போதை பொருள் பாவனையினால் ஏற்படும் நடைமுறைப் பிரச்சினைகளை அடையாளப்படுத்துவதும் இவ்வாய்வின் நோக்கங்களாகும். பண்பு ரீதியிலான இவ்வாய்வானது முதலாம் மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகளை மையப்படுத்தியதாகும். இவ்வாய்வு பிரதேச போதைப் பொருள் தடுப்பு பிரிவு பொலிஸ் அதிகாரி, சமூக நிறுவனங்களின் உத்தியோகஸ்தர்கள் மற்றும் எழுமாறாக தெரிவு செய்யப்பட்ட (10) குடும்பங்களிடமிருந்து பெறப்பட்ட நேர்காணல் பகுப்பாய்வினையும் ஆவண மீளாய்வினையும் மையப்படுத்தியது ஆகும். இவ்வாய்வு பிரதேசத்தில் கஞ்சாஇ ஹெரோயின்இ அபின்இ பீடிஇ மாவா மற்றும் போதை மாத்திரை ஊசி போன்றவை அதிக அளவில் பாவனையிலுள்ள போதைப்பொருள்கள் எனவும் இப்போதைக்கு அடிமையாக உள்ள நபர்கள் சமூக நெறிபிறழ்வு, சிறுவர் துஷ்பிரயோகம், களவு என்பவற்றை மேற்கொள்வதோடு, சண்டை, குடும்ப உடைவு மற்றும் சமூக சீரழிவுகள் போன்ற பல்வேறு பிரச்சினைகளும் போதைப் பொருள் பாவனையானது காரணமாக அமைந்துள்ளது. இப்பிரதேசத்தில் ஏற்படும் பிரச்சினைகளில் 90மூ மது பாவனைக்கு அடிமையானவர்களால் ஏற்படுகின்றது என மூதூர் பிரதேச பொலிஸ் பிரிவு அறிக்கை குறிப்பிடுகின்றது. இவ்வாய்வின் மூலம் போதைப்பொருள் பாவனையினால் ஏற்படும் பாதிப்புகள் மற்றும் அதன் விளைவுகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் பாடசாலை மாணவர்கள்இ இளைஞர்கள் மத்தியில் போதைப் பொருள் பாவனையை தடுத்தல் தொடர்பான செயற்றிட்டங்கள், கருத்தரங்குகள் என்பவற்றை நிகழ்த்துவதன் மூலமும் போதைப் பொருட்களை விற்பனை செய்பவர்களை கண்டறிந்து அவர்களை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்தல் மற்றும் போதைப்பொருள்பாவனையில் ஈடுபடுபவர் அவற்றிலிருந்து விடுபடுவதற்கான புனர்வாழ்வு மையங்கள் அமைத்தல் மூலமும் சிறப்பான சூழ்நிலையை ஏற்படுத்தித்தர முனைதல் என்பன இவ்வாய்வின் வழியே எதிர்பார்க்கப்படுவதோடு எதிர்காலத்தில் இவ்விடயத்தில் ஆய்வை மேற்கொள்வோருக்கு உதவுவதாகவும் இவ்வாய்வு அமைகின்றது.

**திறவுச் சொற்கள்-** அக்கரைச்சேனை கிராமம், போதைப் பொருள் பாவனை, பிரச்சினை


ISBN 978-624-5736-14-0

## 1. அறிமுகம்

எமது நாடானது நாகரிக வளரச்சிப் பாதையில் செல்கின்ற அதேவேளை தொன்றுதொட்டு நடைமுறையில் இருந்து வரும் சில தீய பழக்கங்கள் அதாவது மது போதை வஸ்து மற்றும் சிகரெட் பாவனை இன்று 6 தொடக்கம் 60 வரை வேரூன்றி நிற்பது கவலைக்குரிய விடயமே. மனிதனின் சுய நிலையை சீர் குலைத்து, புத்தியை மழுங்கடித்து, நல் வாழ்வுக்கு பங்கம் விளைவிக்கும் விடயமே போதைப் பொருள்ஆகும். மோத்தத்தில் போதை ஏற்படுத்தக் கூடிய அனைத்தம் மனிதனுக்கு தீங்கானவையாகவே அமைகின்றன அவற்றை முற்றாக தடுகக் வேண்டும் என்பதே இஸ்லாத்தின் போதனையாகவும் அமைகின்றன. அதாவது அல்குர்ஆன் ஐந்தாவது அத்தியாயம் 90 வது வசனத்தில் குறிப்பிடுவதாவது, ''மது மற்றும் சூதாட்டம் மூலம் உங்களுக்கிடையே பகைமையும், வெறுப்பையும் ஏற்படுத்தவும், அல்லாஹ்வின் நினைவை விட்டும், தொழுகையை விட்டும் உங்களைத் தடுக்கவுமே ஷைத்தான் விரும்புகிறான். எனவே விலகிக் கொள்ள மாட்டீர்களா?'' மேலும் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் ''போதையை ஏற்படுத்தும் அனைத்தும் ஹராமாகும்'' (அறிவிப்பாளர் இப்னு உமர் (ரழி), ஆதாரம் முஸ்லிம் 3739) உலகளாவிய ரீதியில் 15 தொடக்கம் 74 வயதுக்குட்பட்ட 243 மில்லியன் மக்கள் போதைக்கு அடிமையாகி உள்ளனர். இவர்களில் 80 வீதம் ஆண்களும், 20 வீதம் பெண்களும் உள்ளனர் என ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது பூரி பயனாளரக்ள் அதிகரிப்பினால் எங்கே போதைப் பொருள்பாவனையை ஒழிக்க வேண்டும் என்ற நோக்கில் ஐக்கிய நாடுகள் சபை 1987 ஆம்ஆண்டு ஜுன் 26ம் திகதியை போதைப் பொருள்ஒழிப்பு மற்றும் சட்ட விரோத கடத்தல் தினமாக பிரகடனப்படுத்தியது மதுபானம். புகையிலை, அபின், ஹெரோயின். கஞ்சா, பீடி மாவா மற்றும் போத ஏற்படுத்தக்கூடிய இன்சுலின் போன்ற இன்னும் பல்வேறு போதைப் பொருட்கள்காணப்படுகின்றன (ஐக்கிய நாடுகள் சபை 2020).

உரை சுரங்கத்துடன் போதைப்பொருள் துஷ்பிரயோகம் பற்றிய ஆய்வின் போது, மக்கள் போதைப்பொருள் பாவனையினால் உளரீதியான நோய்களுக்கும் உள்ளாகின்றனர் எனவும் மிகத் தெளிவான முறையில் குறிப்பிடப்பட்டுள்ளது (நதியாஏ.சுஜனோவா,2020). உலகளாவிய ஆல்கஹால் மற்றும் பிற போதைப் பொருட்களின் நுகர்வு மற்றும் துஷ்பிரயோகம் பல்கலைக்கழக மாணவர்களின் வாழ்க்கையில் பெரும் அளவில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் அறிய முடிந்துள்ளது. (சுகாதார கல்வி ஆராய்ச்சி, தொகுதி 10,2001). தற்கால உலகில் மிகவும் பெரிய சவாலாக, கொரோனா வைரஸ் நோயை எதிர்கொண்டு வருகின்ற நிலையில், பரவலான வேலை என்னை மாற்றும் பயனத்தடைகளினால் உருவாக்கப்பட்ட அதிர்ச்சிகரமான தனிமை ஆகியவற்றின் தாக்கத்தினால் மிக அதிகளவில் சிறுவர் துஷ்பிரயோகம், உள நோய்கள் ஏற்படுவதற்கு மிகப் பெரும் காரணமாக 2019ம் ஆண்டின் இரண்டாவது காலாண்டின் படி, போதைப் பொருட்களின் பாவனை அதிகரிப்பு என அறியப்பட்டுள்ளது (டேவிட் ஸ்பார்க்மேன்,2020).

இலங்கையைப் பொறுத்தவரையில் 2016க்கு பின்னர் மதுபாவனை அதிகரிகக்த் தொடங்கியுள்ளது. 2018 ஆம்ஆண்டு அதி கூடிய போதைப் பொருள்கைப்பற்றப்பட்ட

ஆண்டாக பதிவாகியுள்ளது. மேலும் வடக்கு பாகிஸ்தான், இந்தியா ஆகிய நாடுகளிலிருந்து போதைப் பொருட்கள்கொண்டு வரப்படுவதாக (யேவழையெட னயபெநசழரள னசரபள உழவெசழட டிழயசன) அறிக்கை தெரிவிக்கின்றது மது பாவனையில் உலகளாவிய ரீதியில் இலங்கை நான்காவது இடத்தில் காணப்படுகின்றது (யேவழையெட னயபெநசழரள னசரபள உழவெசழட டிழயசன). இலங்கையில் போதைப் பாவனைக்கு அடிமையானவர்கள் 50 வீதம் திருமணமாகாத இளைஞர்கள், இவர்களுள் பலர் பல்கலைக்கழக, உயர்தர மற்றும் சாதாரன தர மாணவர்கள் என இலங்கை சுகாதார அமைச்சின் அறிக்கை தெரிவிக்கின்றது. இதனடிப்படையில் தற்போது அக்கரைச்சேனை பிரதேசத்தில் 50 வீதமானவர்கள் போதைவஸ்துக்கு அடிமையானவர்கள்ளன கண்டறியப்பட்டுள்ளன (உலக சுகாதார அமைப்பு 2016). முஹம்மட் இல்யாஸ், “மது மற்றும் புகைத்தல் பாவனையை கையாளுவதில் இஸ்லாமிய உளவளத்துணையின் பாங்கு” , சாய்ந்தமருது அடிப்படையாக கொண்டு ஆய்வின் போது, 2017ம் ஆண்டின் அபயகர ஔடத அதிகார சபையின் புள்ளிவிபர அறிக்கையின்படி 2016ஐ விட 2017ல் போதைப்பொருள் பாவனை ஆனது இலங்கையில் அதிகரித்து காணப்படுகின்றது என்றும் வெளிநாட்டிலிருந்து இலங்கைக்கு போதைப் பொருள் கடத்தி வந்த 186 வெளிநாட்டுப் பிரஜைகள் கைதாகி உள்ளதாகவும்,வளர்ந்த உறைவிட இளைஞர்களிடையே போதைப் பழக்கமானது எண்ணிக்கை அதிகரித்து வருவதாக அறியக் கிடைத்துள்ளது.

எஸ்.எல்.எம்.நபீர் அவரால் எழுதப்பட்ட ஆய்வொன்றில் போதைப் பாவனையினால் இன்றைய சமுதாயம் உடலியல் துஷ்பிரயோகங்களுக்கு, உளவியல் நோய்களுக்கும் உள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இன்றைய இளைஞர்கள நாளைய தலைவர்கள் இவர்கள் பாடசாலை சென்று பல்கலைக்கழகம் முடித்து சிறந்த பட்டதாரிகளாக வருவதற்குப் பதிலாக போதைக்கு அடிமையாகி நாளைய நற்சமூகத்தை சீர்கேட்டின்பால் கொண்டுசென்றுவிடுவார்கள் போல் தங்களின் செயற்பாடுகள் மூலம் சுட்டிக்காட்டுகின்றனர். போதைப்பொருள் பாவனையால் ஏற்படும் தீங்குகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஜுன் 26ஆம் திகதி சர்வதேச போதைப்பொருள் ஒழிப்பு தினமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. (அலியார், யூ. எல்., 2016) எஸ்.எம்.எம்.மஷாஹிர், எம்.ஐ.எம்.ஹெல்பான அவர்களால் எழுதப்பட்ட “போதைப் பொருள் பாவனையும் மகளிர் மற்றும் சிறுவர்கள் மீதான அதன் தாக்கங்களும்” ஏறாவூர் பொலிஸ் பிரிவினை மையப்படுத்திய கள ஆய்வில் போதைப் பொருள்பாவனை குடும்ப பிரச்சினைகளுக்கும், மகளிர் மற்றும் சிறுவர்கள்பாதிப்படைவதற்கும் அடித்தளமாக காணப்படுவதுடன், போதைப் பொருள் வகைகள் மற்றும் அவர்கள் பாதிப்புறும் வடிவங்கள் என அடையாளப்படுத்தப்பட்டு போதைப்பொருளை ஒழிப்பதற்கான முன்னெடுப்புகளும் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன. பஸ்மினா,டி அவர்களால் எழுதப்பட்ட ஆகாயம் எனும் ஆய்வுக் கட்டுரையில் சிறுவர்கள் போதைப் பொருளுக்கு அடிமையாகும் வயதெல்லை 15 ஆக காணப்பட்டதுடன் இது தற்போது 14 வயது வரை குறைந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. எப்.எம் ஆஷிக் அவர்களால் (2019) ‘மூதூர் போதைப் பொருள்பாவனையும் அதன் ஈடுபாடும்” என்ற தலைப்பில் எழுதப்பட்டுள்ள ஆய்வில் அப்பிரதேசத்தில் போதைப் பொருள் பயன்படுத்துபவர்கள் மற்றும் அதனால் ஏற்படும் விளைவுகள் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது.

கொலை, பாலியல் வன்முறைகள், விபச்சாரம் போன்ற சமூகவிரோதக் குற்றச் செயல்கள் போதை பாவனையினாலையே அதிகமாக ஏற்படுகின்றன. இதன் அடிப்படையில் இலங்கையில் பதிவாகும் மொத்த குற்றச்செயல்களில் 38 வீதம் குற்றசெயல்கள் மது பாவனையினால் ஏற்படக் கூடியதாக காணப்படுகின்றது. மேலும் கடந்த ஆண்டில் நடந்த மொத்த வாகன விபத்தில் இறந்தோரின் எண்ணிக்கை 2800 ஆகும். இதில் 90 வீதமானவை மது பாவனை காரணமாக வாகன விபத்துக்குள்ளானோர் என பொலிஸ் பிரிவு அறிக்கை குறிப்பிடுகின்றது. அக்கரைச்சேனை கிராமத்தைப் பொறுத்தவரையில் சிறுவர்கள்முதல் வயதானவர்கள் வரை அதிகமானவர்கள் போதைகக் அடிமையாகி வருகிறார்கள். இவர்கள்மத்தியில் (கஞ்சா,மதுபானம்,புகையிலை,பீடி) போன்ற போதைப் பொருட்கள் அதிக பயன்பாட்டில் கானப்படுகிறது. குறிப்பாக பாடசாலை மாணவர்களுக்கு மத்தியில் கஞ்சாஇமாவா போன்ற போதப்பொருட்கள் பயன்பாடடில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. மூதூர் பிரதேசம் திருகோணமலை மாவட்டத்திலுள்ள அதன் ஒரு பிரதேச செயலர் பிரிவுகளில் ஒன்றாகும். இப்பிரதேசத்தில் உள்ள கிராமமான அக்கதைச்சேனை கிராமமே இவ்வாய்வின் பகுதியாகும். இக்கிராமம் 2.24 சதுர கிலோமீட்டர் ஆகவும் 10,006 குடும்பங்களையும் கொண்டதாகவும் காணப்படுகின்றது. இக்கிராமத்தில் அதிகமானவர்களுக்கு மத்தியில் போதைப் பாவனை நடைமுறையில் இருப்பதாக அறிய முடிகின்றது எனவே இதனை ஆய்வுக்குட்படுத்தி நடைமுறை சார் பிரச்சினைகளை கண்டறிய இவ்வாய்வு முயற்சிக்கின்றது.

## 2. ஆய்வு முறை

இவ்வாய்வானது பண்பு ரீதியாக மேற்கொள்ளப்பட்டது ஆகும். இவ்வாய்வின் முதலாம், இரண்டாம் நிலைத் தரவுகளை மையப்படுத்தியதாகும். ஆக்கரைச்சேனை கிராமத்தில் காணப்படுகின்ற சமூக நிறுவன முக்கியஸ்தர்களிடம் நேர்காணல் செய்யப்பட்டதோடு (5) பொலிஸ் அறிக்கை (2018) மற்றும் கிராம உத்தியோகத்தர் மூலம் பெறப்பட்ட பிரதேச செயலக அறிக்கையும் இதற்கு பயன்படுத்தப்பட்டுள்ளன போதைவஸ்துக்கு அடிமையான அவர்களையும் அவர்களது குடும்பத்தினரையும் (10) நேரடி நேர்காணல் மூலம் ஆராய்ந்து பெறப்பட்ட தகவல்களை

பகுப்பாய்வு செய்து அதற்கான விளக்கங்களைஇவிபரிப்பு முறையை இவ்வாய்வில் குறிப்பிடடுள்ளோம்.

## 3. ஆய்வின் நோக்கம்


மூதூர் அக்கரைச்சேனை பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ள இவ்வாய்வானது பின்வரும் நோக்கங்களை கொண்டமைந்துள்ளது.

1. மூதூர் பிரதேச அக்கரைச்சேனை கிராமத்தில் பாவனையிலுள்ள போதைப்பொருள் வகைகளை அடையாளப்படுத்தல்.
2. போதைப்பொருள் பாவனையினால் ஏற்படும் நடைமுறைசார் பிரச்சினைகளை அடையாளம் காணல்.

## 4. தரவுப் பகுப்பாய்வும் பெறுபேறுகளும்

2017-2019 வரையான காலப்பகுதியில் அக்கரைச்சேனை பிரதேசத்தில் பொலிசாரால் மேற்கொண்ட தேடுதலில் போதைப்பொருளுடன் தொடர்பான குற்றச்செயல்களே அதிகமாக இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. மூன்று வருடங்களில் மொத்தமாக 80 வீதமான குற்றங்கள் போதையுடன் தொடரப்பானதாக உள்ளன.


4.1 மூதூர் அக்கரைச்சேனை பிரதேசத்தில் பிரதேச மொத்த வாழும் மொத்த மக்களின் எண்ணிக்கையும் போதைப்பொருள் பாவனையாளர்களின் வீதமும் வருமாறுஇ (2017-2019)




ஆய்வு பிரதேசமான அக்கரைச்சேனை பிரதேச மூதூர் பொலிஸ் பிரிவில் மதுபானம், கஞ்சா, ஹெரோயின், அபின், புகையிலை போன்ற போதைப் பொருட்களின் பாவனை இடம் பெறுவதை கண்டறிய முடிகிறது மேலும் மொத்த மக்கள் எண்ணிக்கையாக 2017 இல் 3738 பேராகவும் காணப்பட்ட வேளை போதை பொருளுக்கு அடிமையானவர்களின் எண்ணிக்கை 40 வீதமாக காணப்பட்டது. அதேபோல் 2018 ஆம்ஆண்ல் 3708 பேர் மக்கள் காணப்பட்ட வேளையில் 67 வீதமும் 2019 ஆம் ஆண்டில் 3959 மக்கள் காணப்பட்ட போதும் 87 வீதமாக போதை பாவனையாளர்களின் வீதமானது மேலும் அதிகரித்துக்காணப்பட்டது. எனவேதான் மக்கள் தொகைக்கு ஏற்ப போதை பாவனையாளர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துச் செல்வதனை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

4.2 போதைப் பொருள்பாவனையாளர்களின் எண்ணிக்கை வருமாறு (2017-2019)

4.2.1(வரைபடம் 01,2017)






ISBN 978-624-5736-14-0


மூதூர் அக்கரைச்சேனை பிரதேசத்தில் மேறகொள்ளப்பட்ட கள ஆய்வின் அடிப்படையில் 2017 ஆம் ஆண்டில் மொத்த சனத்தொகையில் 382 எண்ணிக்கையான மக்கள் போதைக்கு அடிமையானவர்கள் ஆக இனங்கானப்பட்டுள்ளனர். இதனடிப்படையில் புகையிலை (300)இகஞ்சா(56)இகுடு(13)இஏனையவை(13) போன்றவற்றை போதைப் பொருள் பாவனை உள்ளானவர்கள் ஆகும். இவற்றில் புகையிலை பாவிப்பவர்கள் அதிகமானவர்களாக காணப்படுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. குறைவான போதை பொருளாக குடு அவர்களின் எண்ணிக்கை காணப்படுகின்றது.

4.2.2 (வரைபடம் 02,2018)




மேலும் 2018 ஆம்ஆண்டினை நோக்கும் போது மொத்த சனத்தொகையில் 700 பெயர் போதைகக் அடிமையானவர்களாக காணப்படுகின்றனர். இவ்வாண்டிலும் புகையிலை பாதிப்புகள் எண்ணிக்கையே (550) கூடுதலாக காணப்படுகின்றது. மேலும் கஞ்சாஇகுடு அதைப் பாவிப்பவர்களின்எண்ணிக்கையும் 2017 இலும் பார்க்க அதிகரித்துக் காணப்படுகின்றது.

4.2.3 (வரைபடம் 03,2019)




2017 மற்றும் 2018ஆம்ஆண்டுகளில் காணப்பட்டது போன்றே 2019ஆம்ஆண்டிலும் புகையிலும் பாவிப்பபவர்கள்எண்ணிக்கையே (877) அதிகரித்து காணப்படுகிறது. என்றாலும் 2017

இணையும் பார்க்க 2019இல் குடு பாவித்தவர்களின் எண்ணிக்கையானது (23) கூடி காணப்பட்டாலும்,2018 விட குறைவடைந்து காணப்படுகின்றது. கஞ்சா பாவனைகயாளரக்ளின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டுதான் செல்கின்றது என்பது வரைபடத்தின் மூலம் பார்க்கக் கூடியதாக உள்ளது. எவ்வாறிருப்பினும் 2017 இணையும் பார்க்கும் போது 2019 ஆண்டின் போதைப் பாவிப்பவர்கள் எண்ணிக்கையானது அதிகரித்துக் கொண்டுதான் செல்கின்றது என்பது இக்கால ஆய்வின்படி அவதானிக்கக்கூடியதாக உள்ளது. (மூதூர் பொலிஸ் பிரிவு அறிக்கை 2017-2019)

ஆய்வுப் பிரதேச பொலிசாரால் முறைப்பாடுகளை மையப்படுத்தியே மேற்குறிப்பிட்ட தகவல்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு உள்ளன. இதன் அடிப்படையில் குடு கஞ்சா புகையிலை மற்றும் போதை தரக்கூடிய பொருட்களும் காணப்படுகின்றன என்பதனை அறிய முடிகின்றது. பயம், குடும்ப மானம், பொலிஸ் கெடுபிடிகள், போன்ற காரணங்களினால் காவல் நிலையத்தில் முறைப்பாடு செய்யாத போதைப் பொருளோடு தொடரப்பான பல நிகழ்வுகள் இருக்க முடியும், சிலபோது முறைப்பாடு செய்யாததை விட அதிகபடியாகவும் அவை அமைந்திருக்க முடியும். அவை இவ் ஆய்வில் உள்வாங்கப்படவில்லை. ஆய்வுப் பிரதேசத்தில் போதைப் பாவனையினால் மகளிர் மற்றும் சிறுவர்கள் பாதிப்புறும் வடிவங்களை நோக்கும்போது குடும்ப பிரச்சினைகள், மனைவி மற்றும் பிள்ளைகளுக்கு அடித்தல், சிறுவர் துஷ்பிரயோகம், மனைவிக்கு தொல்லை கொடுத்தல், பெண்களை திருமணம் முடிப்பதாக கூறி ஏமாற்றல் மற்றும் இன்னும் பல வகையான பிரச்சினைகள் என்ற வடிவங்களில் மகளிர் மட்டும் சிறுவர் பாதிக்கப்படுவதை மூதூர் பொலிஸ் பிரிவு அறிக்கை எடுத்துக்காட்டுகின்றது. மகளிர் மற்றும் சிறுவர்கள் எதிர்கொள்ளும் பாதிப்புக்களில் மகளிர்கள்அடையும் பாதிப்புக்களே அதிகமாக உள்ளன. அதிலும் குறிப்பாக போதைப் பொருள்பாவனையின் காரணமாக குடும்பப் பிரச்சினைகள் முதன்மை பெறுகின்றது என்பதனை இவ்வாய்வில் அவதானிக்கக்கூடியதாக உள்ளது. போதைப் பொருள் பாவனையினால் பெண்கள் மாத்திரமின்றி சிறுவர்களும் பாதிப்படைந்து உள்ளார்கள்என்பதனை மேற்படி பார்க்கையில் அறிந்து கொள்ள முடிகிறது. இன்னும் மாலை நேரங்களில் பிராந்தியங்களில் அமைந்துள்ள மதுபான சாலைகளில் அதிகமானவர்கள்மதுபானங்களை கொளவ்னவு செய்வதையும், தந்தை மகளிடம் அல்லது மகனிடம் சிகரெட், புகையிலை என்பவற்றை கொள்வனவு செய்வதற்கு அனுப்புவதையும், பாழடைந்த கடடிடங்களில் இளைஞர்கள் பார்ட்டி ரியசவல) என்ற பெயரில் மது அருந்தி தன்னை மறந்து தவறை உணராமல் செயல்படுவதையும் காணக்கூடியதாக உள்ளது இவற்றின் காரணமாக கல்வியின் மட்டமானது குறைவடைந்து செல்லும் நிலையும் காணப்படுகின்றது (மூதூர் பொலிஸ் பிரிவு அறிக்கை 2017-2019) இப்போதை பாவனையாளர்களின் செயற்பாடுகளினால் சிறுவர்கள்மற்றும் மகளிர் நிவாரணம் தேடி சமூக அமைப்புகளுக்கு செல்வது மிககம்குறைவாகும். இருந்த போதிலும் முஸ்லிம் பள்ளிவாசல்களுக்கு ஓரிரு பிரச்சினைகள் கொண்டுவரப்பட்டு பிரச்சினைகளுக்கு பள்ளி நிறுவாகம் முடிந்தளவு தீர்வுகளை வழங்க முயறசிக்கின்றன. இவை முடியாத பட்சததில் பொலிஸ் நிலையங்களுக்கு கொண்டு செல்லப்படுகின்றது. இது பெருமளவில் சாத்தியமானதல்ல என்பதே இவ்வாய்வின் மூலம் அவதானிக்கக்கூடியதாக உள்ளது என்பதை குறிப்பிடுகின்றது.

## 05. முடிவுரை

அக்கரைச்சேனை பகுதியில் போதைப் பொருள் பாவனை அதிகரித்து வருகின்றது. போதைப் பொருள்பாவனை தொடர்பான குற்றச்செயல்கள் அதிகம் இடம் பெறுகின்றன. போதைப் பொருள்பாவனையில் மதுபாவனை முதன்மை இடத்தை பெற்றருப்பதோடு, போதைப் பொருள் தொடரப்பான குற்றச் செயல்களும் அதிகம். போதைப் பொருள்பாவனையின் காரணமாக பல்வேறு விதமான குடும்பப் பிரச்சினைகள் மற்றும் சமூகவியல் சார்ந்த பிரச்சினைகளை இப்பிரதேச மக்கள் எதிர்நோக்கி வருகின்றனர். இவற்றில் அதிகமாக குடும்ப பிரச்சினைகளால் சிறுவயதில் கல்வியானது முடக்கப்பட்டு கல்வி மட்டமானது குறைவடைந்து செல்லும் நிலை காணப்படுகின்றது. இது தொடர்பில் மூதூர் பிரதேச அக்கரைச்சேனை கிராமத்தில் மதத்தலைவர்களிடமும், சமூக ஆர்வலர்களிடமும், கிராம நிலதாரியிடமும் பொலிஸ் பிரிவில் பெறப்பட்ட தகவல்களை அடிப்படையாக கொண்டும், ஏழுமாறாக 10 குடும்பங்களை முன்னிலைப்படுத்தும் தரவுகள் பகுப்பாயப்பட்டுள்ளன. இவ் ஆய்வு மேறகொள்ளப்பட்டதன் அடிப்படையில் போதை பாவனையினால் இப்பிரதேசம் பாதிக்கப்பட்டுள்ளது என்பதை இவ்வாய்வு முடிவாகக் கொள்கிறது.

### ஆலோசனைகள் மற்றும் பரிந்துரைகள்

- ✓ போதைப் பொருள் பாவனையினால் ஏற்படும் பாதிப்புக்களையும், பாரதூரமான விளைவுகள்பற்றிய விழிப்புணர்வுகளையும் அனைவரிடத்திலும் ஏற்படுத்த வேண்டும்.
- ✓ பாடசாலை மாணவர்கள், இளைஞர்கள்என்பவருக்கு மத்தியில் போதைப் பொருளை தவிர்ப்பது தொடர்பான செயற்திட்டங்கள், கருத்துக்கள் என்பவற்றை நிகழ்த்துவதன் மூலம் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.
- ✓ ஆய்வுப் பிரதேசத்தில் போதைப் பொருட்கள்விற்பனை செய்பவர்களை கண்டறிந்து அவர்களை கட்டுப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.
- ✓ போதைப்பொருள் பாவனையினால் ஏற்படும் பாதிப்புக்களை சீர்திருத்துவதற்கான வசதிகளையும், வழிமுறைகளையும் ஏற்படுத்த வேண்டும்.
- ✓ போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்கள் மருத்துவர்களினதும், உளவளத்துணையாளரக்ளினதும் ஆலோசனைப் படி செயலாற்றவும் புனர்வாழ்வு அளிப்பதற்கான வழிவகைகளை ஏற்படுத்தவும் வேண்டும்.

### உசாத்துணைகள்


அன்வர் எம்.ஐ. (2015-02-04). மது போதைவஸ்து பாவனையும் இன்றைய இளைஞர் சமூதாயமும்.

‘‘தர்ஜுமதுல் குர் ஆன் தமிழ் மொழி பெயர்ப்பு’’ (2015) இலங்கை ஜமாத் அன்சாரில் சுன்னத்ல் முஹம்மதியா தலைமையகம் பறகாதெனிய.

டேவிட் ஸ்பார்க்மேன்,(2020). கொவிட் 19 காரணமாக போதைப் பொருள் உயர்வு ாவவிள:.:..:.றறற.நாளவழனயல.உழஅ (2020 ஆகஸ்ட்(٢

நபிர் எஸ்.எல்.எம், (2018). "இளைஞர்களுக்கு மத்தியில் போதைவஸ்து பாவனையின் ஊடுருவலும் அதன் தாக்கங்களும், அட்டாளைச்சேனை ஆலங்குளம் பிரதேசத்தை மையப்படுத்திய ஆய்வு".

நதியா சஜனோவா ஏ,(2020)."உரை சுரங்கத்துடன் போதைப்பொருள் துஷ்பிரயோகம் ஆராய்ச்சி போக்கு விசாரணை"(நிகல்நிலை) ாவவிள:.'..'.னழடை.ழசப.'.10.1155.(2020 (٢١ngg;utup

பெர்னாடொ மற்றும் ஜோன் கேண்டிடோ, (2018)."போதைப் பொருள் மற்றும் மாணவர்களின் பயன்பாடு"( நிகல்நிலை) கிடைக்க பெற்றது. ாவவிள:.'..'.னழடை.ழசப.'.10.1590. (2018 மே(٠٥

போலிஸ் நிலையம் (2018) வருடாந்த அறிக்கை பரீட்சை வழிகாட்டி (2016.05.25) "இளம் சந்ததியினரை குறிவைக்கும் போதைப் பொருள்பாவனை" (2017.04.05) https://slasgk.blogspost.com

மிச்ஷனல் குமார் 2011 டிசம்பர் "அடிமையாகிய மூளை நாங்கள் ஏன் மருந்துகக்ள், அற்ககோல் மற்றும் நிகோடின் ஆகியவற்றை பயன்படுத்துகின்றோம்"

ஹப்லான் 2018 :போதைப் பொருள்பாவனை மகளிர் மற்றும் சிறுவர் மீதான அதன் தாக்கங்களும், விளைவுகளும், ஏழாவது பிரதேசத்தை மையமாகக் கொண்ட ஆய்வு" இஸ்லாமிய ஆய்வுகள் மற்றும் அரபு மொழி பீடம் தென்கிழக்கு பல்களைகக்ழகம் இலங்கை

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன. (2016.01.19) "சட்டவிரோத போதை பொருள்பாவனை சமூகத்தில் பாரிய பிரச்சினையாக உள்ளது"(நிகழ்நிலை) கிடைக்கப் பெற்றது. ாவவிள:.'..'.றறற.நெறளகசைளவ.டம (2017.04.05)

**நேர்காணல்கள்**

1. சாராஜ் எச். எம் மற்றும் ஜில் எஸ். எம் பள்ளிவாயல் அக்கரைச்சேனை. (2021.01.22)
2. நிகான் எஸ். எம் தனியார் வைத்தியசாலை மூதூர். (2021.01.22)
3. மீன் எம். எம் கிராம உதத்தியோகத்தர். அக்கரைச்சேனை மூதூர். (2021.01.15)
11. றிபான் (ஆசிரியர்) மூதூர். (2021.02.01)